# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**<u>விசாரணை நாள் 10.07.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண் CP 2651-E-2024</u>**

திரு சி.பரத்வாஜ் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
அரசு சார்பு செயலாளர்,
வருவாய் (ம) பேரிடர்
மேலாண்மைத் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 005

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு சி.பரத்வாஜ் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | சென்னை தலைமைச் செயலகம், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்புச் செயலாளர் சார்பில், அத்துறையின் உதவி பிரிவு அலுவலர் / உதவி பொதுத் தகவல் அலுவலர் திரு எஸ்.தர்மராஜ் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 31.07.2021 |

<table>
<tr><td colspan="2"><u>கோரிய தகவல்</u>:-<br><br>தகவல் ஆணையம் 02.12.2019 நாளிட்டு பிறப்பித்த உத்தரவை (வழக்கு எண்.SA 7475/D/2019) நில நிர்வாக ஆணையர், வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர் ஆகியோர் நிறைவேற்றியதற்கான ஆதாரங்களை வழங்க வேண்டுமெனக் கோரியுள்ளார்.</td></tr>
<tr><td>பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம்</td><td>இணைக்கப்படவில்லை</td></tr>
<tr><td>சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள்</td><td>18.12.2021</td></tr>
<tr><td>சட்டப்பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனு நாள்</td><td>28.05.2024</td></tr>
</table>

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் சென்னை தலைமைச் செயலகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அரசு செயலாளருக்கு அனுப்பிய மனு தொடர்பாக தனக்கு வழங்கப்பட்ட பதில் தவறானது என்று கூறி, பிரிவு 19(1)-ன் கீழ் முதலாம் மேல்முறையீட்டு மனுவையும், பின்னர், பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனு மனுவை அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த புகார் மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்:

a. மனுதாரரின் 6(1) மனு, (i) இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (ii) நில நிர்வாக ஆணையர் அலுவலகம் (iii) நில அளவை மற்றும் நிலவரித் திட்ட அலுவலகம் (iv) தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (v) நில சீர்திருத்த இயக்குநர் அலுவலகம் மற்றும் (vi) சென்னை தலைமைச் செயலகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பொதுத்-2) துறை அலுவலகம் ஆகியவற்றின் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு உரிய நடவடிக்கைகாக 28.08.2021 அன்று சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றப்பட்டதாக தெரிவித்து, அவற்றுக்கு பொதுத் தகவல் அலுவலர்கள், மனுதாரருக்கு அளித்துள்ள பதில் கடிதங்களின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், **அவற்றின் நகல்கள் மனுதாரருக்கு 28.01.2026 அன்று அரசு கடிதம் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது என்றும. ஆணையத்தின் 19.06.2026 நாளிட்ட விசாரணை அறிவிப்பின் அடிப்படையில் மனுதாரருக்கு மேற்படி பதில் கடிதங்களின் நகல்கள் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.**

b. மனுதாரர் கோரிய தகவல்களில் இனம் 8(d) தொடர்புடைய தகவல்கள் மட்டும் நில சீர்திருத்த ஆணையரகத்திடமிருந்து மனுதாரருக்கோ / அரசுக்கோ அனுப்பப்படவில்லை என்று ஆணையத்திடம் தெரிவித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம் கீழ்க்கண்ட விவரங்களை பதிவு செய்கிறது:-

I. சென்னை தலைமைச் செயலகம், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்புச் செயலாளர் மனுதாரரின் 6(1) மனுவை, 28.08.2021 அன்று சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மேற்குறிப்பிட்ட 6 துறைகளின் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு மாற்றம் செய்துள்ளார். அவர்களில்,

a) சென்னை தலைமைச் செயலகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பொதுத்-2) துறையின் சார்புச் செயலாளர் மனுதாருக்கு 30.09.2021 அன்று பதில் அளித்துள்ளார்;

b) இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), 16.11.2021 அன்றும்; தமிழ்நாடு ஆவணக் காப்பகம் / வரலாற்று ஆராய்ச்சி மையத்தின் பொதுத் தகவல் அலுவலர் 29.11.2021 அன்றும்; நில அளவை மற்றும் நிலவரித் திட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 28.02.2023 அன்றும் காலதாமதமாக மனுதாரருக்கு பதில் அளித்துள்ளனர்;

c) நில நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் நில சீர்திருத்த இயக்குநர் ஆணையம் ஆகியவற்றின் பொதுத் தகவல் அலுவலர்கள் மனுதாரருக்கு பதில் ஏதும் வழங்கவில்லை;

5) விசாரணையின் இறுதியில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

I. **சென்னை தலைமைச் செயலகம், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்புச் செயலாளர் மனுதாரர் 31.07.2021 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனுவை, 28.08.2021 அன்றுதான் சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் இதர துறைகளைச் சேர்ந்த 6 பொதுத் தகவல் அலுவலர்களுக்கு மாற்றியுள்ளார் என்பதை ஆணையம் பதிவு செய்கிறது ஆகவே, குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் மனுதாரின் 6(1) மனுவை சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மற்ற துறைகளுக்கு மாற்றத் தவறிய அப்பேதைய தலைமைச் செயலக வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறையின் பொதுத் தகவல் அலுவலர் யார் என்பதை <u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அரசு துணைச் செயலாளர்</u> <u>கண்டறிந்து</u> அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று. அதை சென்னை தலைமைச் செயலகம், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்புச் செயலாளர்/ <u>பொதுத் தகவல் அலுவலர்</u> மூலம் இவ்வாணையத்தில் 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.**

II. **மனுதாரருக்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத அப்போதைய இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யார் எனபதை தற்போதைய மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) <u>கண்டறிந்து</u> அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று இவ்வாணையத்தில் 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென தற்போதைய இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கு (பொது) ஆணையம் உத்தரவிடுகிறது.**

III. **சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் அனுப்பப்பட்ட மனு தொடர்பாக மனுதாரருக்கு காலதாமதமாக பதில் வழங்கிய அப்போதைய (i) தமிழ்நாடு ஆவணக் காப்பகம் / வரலாற்று ஆராய்ச்சி மையத்தின் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் (ii) நில அளவை மற்றும் நிலவரித் திட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலர் யார் என்பதை தமிழ்நாடு ஆவணக் காப்பாகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட**

**அலுவலகத்தின் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்கள் கண்டறிந்து அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று இவ்வாணையத்தில் 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென தமிழ்நாடு ஆவணக் காப்பாகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட அலுவலகத்தின் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

IV. **மேலும், சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் அனுப்பப்பட்ட மனு தொடர்பாக மனுதாரருக்கு எவ்வித தகவல்களையும் வழங்காத அப்போதைய (i) நில நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் (ii) நில சீர்திருத்த இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றின் பொதுத் தகவல் அலுவலர்கள் யார் என்பதை நில நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் நில சீர்திருத்த இயக்குநர் அலுவலக ஆகியவற்றின் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்கள் கண்டறிந்து அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று இவ்வாணையத்தில் 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென நில நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் நில சீர்திருத்த இயக்குநர் அலுவலக ஆகியவற்றின் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

**இன்றைய விசாரணைக்கு ஆஜரான** வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறையின் உதவி பொதுத் தகவல் அலுவலர். **மனுதாரர் தனது 6(1) மனுவில் கோரிய தகவல்களில் வரிசை எண் 8(d)ல் கோரிய தகவல்கள் மட்டும்** நில சீர்திருத்த ஆணையரகத்திடமிருந்து மனுதாரருக்கோ / அரசுக்கோ அனுப்பப் படவில்லை என்று ஆணையத்திடம் தெரிவித்துள்ள நிலையில், வரிசை எண் 8(d)**ல் மனுதாரர் கோரிய தகவல்களை** நில சீர்திருத்த ஆணையரக பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று, அதை **மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென சென்னை தலைமைச் செயலகம்,** வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறையின் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் வழக்கு எண் SA 2651-E-2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்பு செயலாளர்,
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 005

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
இராணிப்பேட்டை மாவட்டம்

மாவட்ட வருவாய் அலுவலர்,
இராணிப்பேட்டை மாவட்டம்

பொதுத் தகவல் அலுவலர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் /
வரலாற்று ஆராய்ச்சி மையம்.
எழும்பூர், சென்னை - 600 008

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
நிலச் சீர்திருத்த துறை,,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

பொதுத் தகவல் அலுவலர்,
நில அளவை மற்றும்
நிலவரித் திட்ட இயக்குநர் அலுவலகம்.
சேப்பாக்கம், சென்னை - 600 005

பொதுத் தகவல் அலுவலர் .
நிலநிர்வாக உதவி ஆணையர் அலுவலகம்
சேப்பாக்கம், சென்னை - 600 005

திரு சி.பரத்வாஜ், த/பெ திரு சிவகுமார்,
“அன்னை மீனாட்சி இல்லம்”
எண்.30, தேவராஜ் தெரு,
ஸ்ரீரங்ககிருஷ்ணா நகர்,
காஞ்சிபுரம் - 631 502

Copy to file
CR/PA